# திருகோணமலைப் புராதன திருவுருவங்கள்

Appropriate Technology Services
121, POINT-PE... CAD
NALLUR,
No.

சைவ பரிபாலன சபை

உ

திருக்கோணமலைப்

# புராதன திருவுருவங்கள்

ஷை தலத் தேவாரப் பதிகத்துடன்.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA



யாழ்ப்பாணம்
சைவ பரிபாலன சபையார்
வெளியிட்டது.

23-9-51] [விலை சதம் 10.

சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்,

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

சிவமயம்

# கோணேசர் திருக்கோயில்

## அம்பிகாதேவியின் ஆலயம்

— E. P. இராசையா எழுதியது —

ஈழநாடெனவும் வழங்கும் இந்த இலங்கையிலே தேவாரம் பெற்ற புராதன தலங்கள் மேற்குக் கரையிலுள்ள திருக்கேதீச வாமும் கிழக்குக் கரையிலுள்ள திருக்கோணசலமுமாகும். இத் தலங்கள் எக்காலத்தில் உற்பத்தியாயினவென்று சொல்ல முடியாது. திருக்கோணசலமென்னுந் தலம் கிறீஸ்துவுக்கு முன் 1300 ம் ஆண்டுவரையில் அமைந்ததெனவும், மநுநீதிகண்ட சோழனே இத்தலத்தைக் கட்டினனெனவும் ஐதிகமுண்டு. அந்த மநுநீதிகண்ட சோழன் குளக்கோட்டுமகாராசனுடைய தந்தையாகும். தந்தை இறந்தபின்னர் இவன் இத்திருக்கோயிலின் எஞ்சிய திருப்பணியையும் முற்றுவித்து இதன் நித்திய நைமித்திகங்களை மேன்மைபட நடத்தினனென்பது வாலாறு. இது தட்சிண கைலாசமெனவும் வழங்கும், இத் திருக்கோயில் பல மண்டபங்களோடும் திருவீதிகளோடுங் கூடியதாய் விளங்கியது.

பறங்கிய சரித்திர ஆசிரியராகிய குருகுயெறசோ (Father Queioz) என்பவர் இப்புராதன தலத்தைப்பற்றித் தம் சரித்திர நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். குளக்கோட்டுமகாராசன் செந்நெல் வயல்களையும், புலங்களையும், திருவாபரணங்களையும், விலைபெற்ற பல அரிய பொருள்களையும் இத் தலத்திற்கு சர்வமா

ணியமாக அமைத்தானென்பது கீழ்வருங் கல்வெட்டினால் அறியக்கிடக்கின்றது:

" மாறாத புனல்பாயுந் திருக்குளமும்
வயல்வெளியும் வருந்திச்செய்தே
வீறாக என்மரபோர்க் கீயாமற்
கோணமலை விமலர்க்கீந்தேன்
பேறான பெரியோரே இதற்கழிவு
நினைத்தவர்கள் பெட்புநீங்கி
நீறாகப் போவர்இது நிச்சயம்நிச்
சயங்கோண நிமலர்ஆணை "

## இதன் பூர்வ வரலாறு வருமாறு:

இலங்கையை ஆதிகாலத்தி லாண்ட இராக்கத அரசனாகிய இராவணனுடைய தாயானவள் அவனது தலைநகராகிய இலங்காபுரியிலிருந்து தினந்தோறும் சென்று கோணேசரை வணங்கி மீண்டுவரும் நியதி உடையவள்.

தன்னுடைய தாய், தூரித்த இடத்திற் சென்று இத் தெய்வத்தை வணங்கி நாள்தோறும் மீண்டு வருவதால் மிகவும் சிரமப்படுகிறாளென்று நினைத்த இராவணன் மலையோடு இத் தலத்தைப் பெயர்த்து தன் தலைநகருக்குக் கொண்டுபோவதற்கு எண்ணி அம்மலையை வெட்டிப் பிளக்க முயன்றபோது அது கூட மடைந்திலனெனப் பழைய சரித்திரங் கூறும். வெட்டிய அந்த அடையாளம் இன்றுங் காணத்தக்கதா யிருக்கின்றது.

## கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கள்:

புண்ணிய தீர்த்தமாக மதிக்கப்படும் கோணமலைக்குச் சமீபமாக உள்ள கன்னியாய் எனப்படும் வெந்நீர் ஊற்றுக்கள் இராவணன் தன் தாய்க்கு அந்தியேஷ்டி செய்யும்படி அமைத்ததென்பர்.

## கஜவாகு அரசனுக்கும் இந்த ஆலயத்துக்குமுள்ள தொடர்பு:

கோணேசர் திருக்கோயிலின் அமைப்பைக் கண்ட பௌத்தர்களும் இத் தலத்தின்மேல் ஆர்வம் வைத்தனர். இலங்கையை ஆண்ட கஜவாகு என்னும் பௌத்த அரசன் இத் திருக்கோயிலை இடித்து ஒழித்து இதற்குப் பிரதியாக ஒரு பௌத்த விகாரையை அமைக்க நினைத்து, தன் சைநியத்துடன் இந்த மலைக் கோயிலை அடைந்து இதற்குச் சமீபமாக உள்ள ஒரு இடத்தில் அமர்ந்திருந்தான். அன்று இரவே அவ்வரசன் தன் கண்பார்வை கெட்டுப்போக அதனுற் பெருஞ் சஞ்சலமடைந்தான். அடுத்த நாள் விடியற்காலையில் ஒரு பிராமணர் அவன் முன்னிலையில் வந்து அவனை ஆசீர்வதித்து அவனுக்குத் திருநீறு வழங்க அவன் அதை ஏற்று நெற்றியிற் பூசினான். பூசியவுடனே அவனது கண்பார்வை பழையபடி வெளித்தது. அதனைக் கண்ட அரசன் அற்புதமடைந்து தான் செய்யத் துணிந்த சிவத்துரோகத்தைச் சிந்தித்துக் கவலைகொண்டு கோணேசர் திருக்கோயிலை முன்னிருந்ததைக்காட்டிலும் சிறந்தமுறையில் அமைப்பித்தான். கண்பார்வை கிடைத்தபொழுது அவ் வரசன் முழுகிய தீர்த்தத்திற்கு கண் தழை என்னும் காரணப்பெயர் வழங்கலாயிற்று. அக் கண்தழைக் குளமே இக்காலத்திலே தம்பலகாமத்திலுள்ள வயல்களுக்கெல்லாம் நீர் வழங்குவதாகும்.

## தம்பலகாமம் கோணேசுவரர் கோயில்

கோணமாமலையிலுள்ள திருக்கோயிலுக்கும் தம்பலகாமத்திலுள்ள திருக்கோயிலுக்குந் தொடர்பான ஒரு ஐதிகம் வழங்குகின்றது. கோணேசர் கோயிலிலுள்ள அதிகாரி ஒருதினம் "......மார்தனிர்போல் மேனியுடைப் பறங்கி வந்து, மாகோணப் பதியழிக்க வருவான்" எனக் கனுக் கண்டார்களாம்; அதனாலே அக்கோயிலதிகாரிகள் புராதன கோணேசர் கோயிலிலுள்ள பிரதான சிவலிங்கம் முதலிய மூர்த்திகளையும், உற்சவ மூர்த்திகள் சிலவற்றையும் அகற்றி அத்திருக்கோயிலுக்குச் சமீபமாகவுள்ள கிணறுகளிலும்

குளங்களிலும் மறைத்துவிட்டு, எஞ்சிய மூர்த்திகளைத் தம்பலகாமத்திற்கு எடுத்துக்கொண்டுபோய் அங்குள்ள ஒரு தானத்தில் ஒரு சிறு கோயிலை அமைத்து, அதன்கண் அந்த மூர்த்திகளைப் பிரதிட்டை செய்தார்கள். காலகதியில் சைவத்தை வளர்க்கவந்த அரசர்களும் பிரபுக்களும் அடியவர்களும் தம்பலகாமத் திருக்கோயிலைப் பல மண்டபங்களோடும் திருவீதிகளோடும் வகுத்து அமைத்து அக்கோயிலின் நித்திய நைமித்திகங்கள் குறைவற நடக்கும்படி செய்தார்கள். பூந்தோட்டங்களை அமைத்தார்கள்; செந்நெல் வயல்களைச் சர்வ மானியமாக வழங்கினார்கள்; இதனை "கன்னல்வேலி வரம்புடுத்த கழனி சூழும் தம்பைநகர் என்னும் நாட்டில் அன்பினொடும் இலங்குமணிப் பொன்னாலயமும் - சொன்ன முறையிற்றானமைத்து..." என வரும் ஆன்றோர் வாக்கைக் கொண்டு அறிதலாகும்.

பிற்காலத்திற் கன்ஸ்ரன்ரயின்டீசா என அக்காலத்தில் இலங்கையை ஆண்ட பறங்கிய தேசாதிபதி திருக்கோணமலையில் ஒரு கோட்டை கட்ட நினைத்து அங்குச் சென்றபோது கோணேசர் மலைக்கோயிலையும் கண்டான். அக்கோயிலின் புறத்தே பின்வரும் பாட்டு வரையப்பட்டிருந்தது. அது வருமாறு:—

"முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பனே — பொன்னாரும்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ண னண்டபின்பு
தானுந் தமிழாய் விடும்"

இதில், "பின்னாட் பறங்கி பிடிப்பனே" என்ற வாக்கியத்தை யாரோ அத்தேசாதிபதிக்கு விளக்கிவிட, அதனாலே துணிவுகொண்ட அந்தப் பறங்கி கோணேசர் ஆலயத்தை இடித்து இக்காலத்திலுங் காணப்படுகின்ற விறெட்றிக் என்னும் அரணைக் கட்டினனென்று சொல்வர். அப்படிக் கட்டியபோது இடித்த கோயிலின் கற்களையுங் கொண்டுபோய்க் கோட்டையைக் கட்டினனென்பதற்கு ஒரு சான்று இன்றுங் காணப்படுகின்றது. குறித்த அந்த வெண்பா

வின் சில பாகங்கள் சிதைந்தபடி கோட்டையிலுள்ள ஒரு தூணிற் காணப்படுகின்றது.

சுவாமி மலையிலுள்ள இக்கோயிலுக்கு இக்காலத்தில் யாரும் போகவேண்டுமேயானால் விறெட்றிக் கோட்டைக்கூடாகவே புகுந்து அங்குள்ள ஒருசிறு தெருமூலமாக ஏறி சுவாமிமலையை அடையலாம். தெரு பழுதுற்றிருப்பதால் வண்டிகள் முதலியவற்றினால் செல்லல் சிறிது கஷ்டமாகும். இத்தெரு திருத்தப்பட வேண்டியது. ஆனதால் தென் கைலாசமென்று பூர்வத்தில் விளங்கிய திருககோயிலிருந்த இந்த மலைக்கு நாங்கள் நடந்தே போனோம். இத்தலத்தில் எழுந்தருளிய கோணேசரையும் அம்பிகாதேவியாரையுமே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அக்காலத்திலே தம் தேவாரத்திற் சிறப்பித்துப் பாடியுள்ளார். பழைய திருக்கோயிலின் அறிகுறியாக இச்சுவாமி மலையில் இப்பொழுது ஒன்றுங் காணப்படவில்லை. இதற்குப் பூசைசெய்யுங் குருக்கள் மலையின் விளிம்பிலேறி நின்று சர்வ வியாபகராகவுள்ள கோணேசப் பெருமானைத் தியானித்துக்கொண்டு தேங்காய் புஷ்பம் முதலியவற்றை இட அவை ஆழமான சமுத்திரத்திற் சிந்துகின்றன. பூசகர் நின்று பூசிக்கும் மலை மிகவும் ஆபத்தானது. அவர் சிறிது தன் அடி விலகினால் அல்லது சறுக்கினால் உடனே ஆழமான கடலில் ஆழவேண்டியதே. வணக்குவோர்மாத்திரம் சற்றுத் தூரத்தில் நின்று அருபியாகிய கோணேசப் பெருமானை வணங்குகிறார்கள். வணக்கத்திற்கு இது மன ஒடுக்கத்தைத் தரும் தலமென்பதை நான் என் அனுபவத்தில் நேரே கண்டேன்.

## மண்டபம்

முற்காலத்தில் மநுநீதி கண்ட சோழனும் அவன் மகன் குளக்கோட்டனும் அமைத்த திருக்கோயில் விளங்கிய தானத்தில், இக்காலத்தில் யாரோ புண்ணியவான்கள் ஒரு சிறந்த உன்னதமான மண்டபத்தை அமைத்திருக்கின்றார்கள் அந்த மண்டபத்தில் வெய்யிலுக்கும் மழைக்கும் ஒதுங்கி 200 அன்பர்கள்வரை நின்று பெருமானை வணங்குதலாகும். நான் சிலநாள் அத்தலத்தில் தங்கியபோது

அப்பட்டின அளவை உத்தியோகத்தராகவுள்ள திரு. S. கார்த்திகேசு என்பவருடன் அறிமுகம் பூண்டேன். என் நண்பர்களாகிய திருவாளர்கள் செல்வத்துரை; C. ஆறுமுகம் என்னுமிருவரோடும் நானும் சென்று குறித்த அளவை உத்தியோகத்தரை யடைந்து, சுவாமிமலைக்கும் அந்த மண்டபத்திற்குமிடையேயுள்ள சிறிய தெருவீதியைக் கல்லிட்டுத் திருத்தினால் நல்லதென்று சொன்னோம். திரு. கார்த்திகேயர் எங்கள் கேள்விக்கிசைந்து தம் சொந்தச் செலவில் அப்படியே அத்தெருவீதியைத் திருத்துவராயினர். அவருக்குக் கோணேசப் பெருமான் அருள்புரிவாராக

## திருக்கோணசலத் திருவுருவங்கள்

இத்திருவருவங்கள் மேற்படி திருக்கோணமலை நகர எல்லையுள், சென்ற ஆண்டு (27-7-50) நகரசங்க வேலைக்காரர் ஒரு இடத்திற் கிணறு தோண்டும்போது 4 அடி ஆழத்திற் புதைபொருளாகக் கண்டெடுக்கப்பட்டன.

### மூர்த்திகளின் விபரம்:

மூர்த்திகள் மூன்றும் தாமிரத்தாலாக்கப்பெற்றவை. இவற்றுட் பிரதான மூர்த்தி சிவமூர்த்தங்களுள் ஒன்றாகிய தியாகராசரெனப்படும் சோமாஸ்கந்தமூர்த்தியாகும். இது இருந்த பாவனையாயுள்ளது. இரண்டாவது இரு கரத்தோடு கூடிய தேவி (சக்தி) மூர்த்தமாகும். இதன் கழுத்தில் மங்கல்யம் காணப்படுகின்றதாம். மூன்றாவது: சக்கரம் முதலியன கரத்தில் தரித்திருப்பதால் விஷ்ணுமூர்த்தியோ இல்லையேல் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றோ என அயிர்க்கக் கிடக்கின்றது. பிந்திய இரு மூர்த்தங்களும் நின்ற பாவனையாயுள்ளன.

இத்திருவுருவங்கள் சிறந்த தபதிகளால் அமைக்கப்பெற்றன போற் புலப்படுகின்றன. இவை செய்யப்பெற்ற காலம் 11-ம் நூற்றாண்டுக்கும் 13-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகவிருக்கலாம். இவை கண்டெடுக்கப்பட்டவிடத்தில் எதாகிலும் புராதன ஆலயமிருந்த அடையாளங்கள் இல்லை. முற்காலத்தில் இவை ஒரு ஆல

யத்தில் வழிபடப்பெற்றவையென்பது நிசம், அவ்வாலயம் பெரும்பாலும் திருக்கோணேச ராலயமாகவிருக்கலாம். கொடிய பறங்கியரால் திருக்கோணேசராலயம் ஒருகாலத்தில் இடிக்கப்பட்டபொழுது, பறங்கியருக்குப் பயந்து கோவிற் குருக்கள்மார் அவற்றைக் கிணற்றுள் ஒளித்துவைத்திருக்கக்கூடும்.

இவை 23 - 9 - 51 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படும். இங்கு 15 நாட்கள்வரை அவை தங்கும்.

"பார்வாழி மன்னவர்தஞ் செங்கோல் வாழி
பழமறைஅந் தணர்வாழி பசுக்கள் வாழி!
ஏர்வாழி மங்கையர்கள் கற்பு வாழி!
எங்கோமா னடியார்கள் வாழி கோணை
ஊர்வாழி திருத்தம்பை நகரம் வாழி!
ஓதரும்இப் புராணமுறை வாழி ஒவில்
சீர்வாழி பிடியனமென் னடையாள் வாழி!
திருகோண நாதனருள் வாழி தானே!

உ

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# திருக்கோணமலைத் தேவாரம்

### பண் — புற நீர்மை

*திருச்சிற்றம்பலம்.*

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேற்
றனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திலங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனர் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

[ 7-ம் திருப்பாசுரம் மறைந்துவிட்டது. ]

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
கொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8


அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தோறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்று ணுஞ்சமணு மிருந்து ணுந்தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்று மொண்பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

*திருச்சிற்றம்பலம்.*

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No